# தாள் – III / PAPER – III

# பொது அறிவு / GENERAL STUDIES

## (விரிந்துரைக்கும் வகை) / (Descriptive Type)

## பட்டப்படிப்புத் தரம் / Degree Standard

கால அளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 250

Duration : 3 Hours | Total Marks : 250

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 64 பக்கங்களைக் கொண்டுள்ளது)

(This question-cum answer booklet consists of 64 pages)

### அறிவுரைகள் / INSTRUCTIONS

**(கீழ்க்கண்ட அறிவுரைகளை விண்ணப்பதாரர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)**

**(Candidates shall comply with the following instructions)**

1. விண்ணப்பதாரர்கள், இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 64 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடிருப்பின், உடனடியாக வேறு தொகுப்பை தேர்வுக் கண்காணிப்பாளரிடம் கோரிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

   Candidates shall first ensure that this question-cum-answer booklet contains 64 pages. In case if any defect is found in this booklet, they can request for replacement from the invigilator immediately.

2. ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடை எழுதுவதற்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   Space has been provided to write the answer for each question. Candidates have to answer the questions only in the space provided for that question. They should not write anything outside the space provided.

3. விண்ணப்பதாரர்கள் வினாத்தாளின் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

   Candidates should answer the number of questions as instructed in the question paper in each section. If more than the required number of questions are answered, the additional questions answered in excess at the end of each section will not be taken into account.

4. விண்ணப்பதாரர்கள் தங்களது பதிவு எண்ணை இத்தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் விண்ணப்பதாரர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்படும்.

Candidates should not write their register number anywhere in this booklet. Suitable penalty will be imposed on the candidates who violate this instruction.

5. இவ்வினா-விடைத் தொகுப்பில் வினாக்கள் தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளன. அனைத்து இனங்களிலும் ஆங்கில வடிவில் தரப்பட்டுள்ளவையே முடிவானவை.

In this question-cum-answer booklet, questions are in Tamil and English versions. In all matters, English version is final.

6. விண்ணப்பதாரர்கள் இந்த வினா-விடைத் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

Candidates should not tear off any leaves from this question-cum-answer booklet.

7. இத்தேர்வை பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

There is no reservation of marks for neatness of writing and correctness of spelling in respect of this examination.

8. விண்ணப்பதாரர்கள் கடிதம் வரைதல் போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்தவேண்டும்.

வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் அ ஆ இ அல்லது எக்ஸ் ஒய் இசட் அல்லது எக்ஸ் எக்ஸ் எக்ஸ் போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுதவேண்டும்.

Candidates should not write their name, register number while answering letter writing type questions. Affixing signature in their name is also not permitted. To answer such questions, the name and address given in the questions alone should be used.

If no name is given in the questions, they should write the general names like ABC or XYZ or XXX in 'From' and 'To' addresses.

**அலகு — I**

**UNIT — I**

**பிரிவு — அ**

**SECTION — A**

*குறிப்பு :* i) ஒவ்வொரு வினாவிற்கும் **150 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும்.

***Note :*** Answer **not exceeding 150 words** each.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் **பத்து மதிப்பெண்கள்.**

Each question carries **ten marks**.

iii) கொடுக்கப்பட்டுள்ள **ஐந்து** வினாக்களில் எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

Answer any **four** questions out of **five** questions.

**(4 × 10 = 40)**

| | |
|---|---|
| Q.No. 1 | வினீத் நரேன் வழக்கின் தன்மைகளை விவரித்து அவ்வழக்கின் தீர்ப்பானது இந்தியாவில் பொது ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளில் எவ்வாறு பெரிய மாற்றத்தினை உருவாக்கியது என விவரி.<br>Elaborate the contours of Vineet Narain case and then explain how the judgement of the case imparted a paradigm shift in tackling public corruption in India. |
| Q.No. 2 | தமிழ்நாட்டில் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டதனை விளக்குக.<br>Analyse the implementation of Chief Minister's Breakfast scheme for school children in Tamil Nadu. |
| Q.No. 3 | "மாநிலச் சட்டமன்றத்திலும், மாநில சபையிலும் பின்பற்றப்படும் சட்டமியற்றும் நடைமுறை நாடாளுமன்றத்தில் உள்ளதைப் போன்றது ஆகும்" – விளக்கவுரை தருக.<br>"The legislative procedure followed in the State Legislative Assembly and Legislative Council remains the same as in Parliament". Comment. |
| Q.No. 4 | மத்திய அரசாங்கம் முன்மொழிந்துள்ள தேசிய நீதித்துறை நியமனங்கள் ஆணையத்தை (NJAC) உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வானது நீக்கம் செய்ததன் அடிப்படைகளைத் தெளிவுற விளக்குக.<br>Explicate the grounds on which the constitutional Bench of the Supreme Court Struck Down the National Judicial Appointment Commission (NJAC) as proposed by the Central Government. |
| Q.No. 5 | கட்சித் தாவல் தடைச்சட்டம் மற்றும் இரு கட்சிகள் இணைதல் ஆகியவற்றில் இருக்கும் பிரச்சனைகளைப் பகுப்பாய்க. பிரதிநிதித்துவ மக்களாட்சி அரசியலில் உள்ள இந்தச் சிக்கலைக் கடந்து வரும் வழிகளை பரிந்துரைக்க.<br>Analyse the problems of Anti-Defection law and Merger of Two-parties and recommend ways to overcome this problem in a representative Democratic politics. |

## பிரிவு — ஆ

## SECTION — B

*குறிப்பு :* i) ஒவ்வொரு வினாவிற்கும் **250 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும்.
***Note :*** Answer **not exceeding 250 words** each.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் **பதினைந்து மதிப்பெண்கள்.**
Each question carries ***fifteen* marks**.

iii) கொடுக்கப்பட்டுள்ள **ஐந்து** வினாக்களில் எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
Answer any **four** questions out of **five** questions

**(4 × 15 = 60)**

| | |
|---|---|
| Q.No. 6 | "அரசியலமைப்பு அறநெறிக் கோட்பாடு என்பது சட்டப்பூர்வ ஆவணம் மட்டுமல்ல, மாறாக அது ஒரு சமூக மற்றும் அரசியல் ஒப்பந்தம் என்று அங்கீகரிக்கின்றது". அரசியலமைப்பு அறநெறிக் கோட்பாட்டின் கூறுகளைத் தெளிவுபடுத்துக.<br>"The Doctrine of 'Constitutional Morality' recognizes that constitution is not a legal document alone, but also a social and political compact". Elucidate the elements of Constitutional Morality. |
| Q.No. 7 | அரசியலமைப்புப் பரிகாரங்களைப் பெறுவதற்கான அடிப்படை உரிமைகளை பாதிக்கப்பட்ட குடிமக்களுக்கு முனைப்புடன் செயல்படுத்த உதவுவதை பற்றி விளக்குக.<br>Explain the Constitutional Remedies in the enforcement of fundamental rights of an aggrieved citizen. |
| Q.No. 8 | இந்தியாவில் நிதிசார் கூட்டாட்சிக்கான அடிப்படைக் கொள்கைகள், அதன் செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் நிறுவன கட்டமைப்புக்களை விளக்கவும்.<br>Explain the principles, practices and the various institutional structures of fiscal federalism in India. |
| Q.No. 9 | இந்தியாவில் உள்ள குடிமைப்பணிகளின் வரலாற்றினைக் கண்டறிவதுடன் அவற்றின் சவால்கள் மற்றும் சீர்திருத்தங்களைப் பற்றி விவாதிக்கவும்.<br>Trace the history of Civil services in India and discuss about its challenges and reforms. |
| Q.No. 10 | புலம் பெயர்ந்த இந்தியர்களின் மென் சக்தியின் பங்கினை விளக்கவும். அது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு எவ்வாறு உதவுகிறது?<br>Explicate the soft power role of Indian diaspora. How does it help India's foreign policy? |

## அலகு — II

## UNIT — II

### பிரிவு — அ

### SECTION — A

*குறிப்பு :* i) ஒவ்வொரு வினாவிற்கும் **150 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும்.

***Note :*** Answer **not exceeding 150 words** each.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் **பத்து மதிப்பெண்கள்**.

Each question carries **ten marks**.

iii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** வினாக்களில் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

Answer any **three** questions out of **four** questions.

**(3 × 10 = 30)**

| | |
|---|---|
| Q.No. 11 | மின் ஆளுமையின் நன்மைகளை எழுதவும்<br>Write the advantages of e-governance. |
| Q.No. 12 | NISAR – செயற்கைக்கோளின் முக்கிய அம்சங்களை பற்றி சுருக்கமாக விவரித்து அதன் பல்வேறு முக்கியத்துவத்தினை குறிப்பிடுக.<br>Give a brief account on the salient features and the various importance of NISAR satellite. |
| Q.No. 13 | உலோக அயனிகளுக்கான ஒளிரும் உணரிகளின் பொதுவான அம்சங்கள் குறித்து கருத்து தெரிவிக்கவும்.<br>Make a comment on the general features of fluorescent sensors for metal ions. |
| Q.No. 14 | மொபைல் தொலைத்தொடர்பின் உயிர்ம (செல்லுலர்) அமைப்பின் முக்கிய கருத்துருக்கள் யாவை?<br>What are the key concepts in a cellular system of Mobile Communication? |

### பிரிவு — ஆ

### SECTION — B

*குறிப்பு :* i) ஒவ்வொரு வினாவிற்கும் **250 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும்.

***Note :*** Answer **not exceeding 250 words** each.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் **பதினைந்து மதிப்பெண்கள்**.

Each question carries ***fifteen*** **marks**.

iii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** வினாக்களில் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

Answer any **three** questions out of **four** questions.

**(3 × 15 = 45)**

| | |
|---|---|
| Q.No. 15 | பைரோலைசிஸ் ஆலைகள் என்றால் என்ன? பைரோலைசிஸ் ஆலைகள் லாபகரமானதா? விளக்குக.<br>What is Pyrolysis Plant? Is Pyrolysis plant profitable? Discuss. |

| | |
|---|---|
| Q.No. 16 | தேசிய பசுமை நெடுஞ்சாலைகள் தாழ்வார திட்டத்தை விவாதி.<br>Discuss the Green National Highways corridor project. |
| Q.No. 17 | கடல் நீரில் உப்பு நீக்கம் செய்யும் முறைகளையும் குடிநீர் பற்றாக்குறையை தீர்ப்பதற்கான தீர்வுகளையும் குறித்து விவாதி.<br>"Seawater desalination" – a method for combating drinking water scarcity – Discuss. |
| Q.No. 18 | பேரிடர் மேலாண்மையில், பேரிடருக்குப் பின் செயல்முறை என்பதை விட அதை தடுத்தலும் ஏற்படுவதை குறைத்தலும், ஆயத்தமாக இருப்பதுவும் எவ்வாறு சிறந்ததென நிறுவுக.<br>Establish the fact that prevention, mitigation and preparedness are better than the response procedure in disaster management. |

## அலகு — III

## UNIT — III

**விண்ணப்பதாரர்கள் இந்த அலகில் உள்ள வினாக்களுக்கு தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடையளிக்கலாம்.**

**Candidates may answer the questions in this unit either in Tamil OR in English.**

### பிரிவு — அ

### SECTION — A

*குறிப்பு :*
*Note :*

i) ஒவ்வொரு வினாவிற்கும் **150 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும்.
Answer **not exceeding 150 words** each.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் **பத்து** மதிப்பெண்கள்.
Each question carries **ten marks**.

iii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** வினாக்களில் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
Answer any **three** questions out of **four** questions.

**(3 × 10 = 30)**

| | |
|---|---|
| Q.No. 19 | பண்டைத் தமிழரின் அயல்நாட்டு வாணிபம் குறித்து விளக்குக.<br>Explain the foreign trade that flourished among Ancient Tamils. |
| Q.No. 20 | தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் திராவிட இயக்கங்களின் பங்களிப்பினை விவரிக்க.<br>Describe the contribution of Dravidian movements to the socio-economic development of Tamil Nadu. |
| Q.No. 21 | சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்களிப்புக் குறித்து எழுதுக.<br>Write about the contribution of Tamil Nadu in Freedom struggle. |
| Q.No. 22 | லெமூரியாவில் தோன்றிய தமிழ் ஆதிக்குடிகள் பற்றி வரலாற்று அறிஞர்கள் கூறுவதனை விவரித்து எழுதுக.<br>Describe and elucidate what historians say about the Tamil Primitives who appeared in Lemuria. |

## பிரிவு — ஆ

## SECTION — B

*குறிப்பு :* i) ஒவ்வொரு வினாவிற்கும் **250 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும்.

***Note :*** Answer **not exceeding 250 words** each.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் **பதினைந்து மதிப்பெண்கள்.**

Each question carries ***fifteen* marks**.

iii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** வினாக்களில் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

Answer any **three** questions out of **four** questions.

**(3 × 15 = 45)**

| | |
|---|---|
| Q.No. 23 | தகவல் தொடர்பில் ஊடகங்களின் செயல்பாடுகள் குறித்து விளக்குக.<br>Explain the functions of media in Communication. |
| Q.No. 24 | பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தின் கல்வி நிலையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொகுத்துரைக்க.<br>Summarize the changes in the educational status of Tamil Nadu during the Nineteenth century. |
| Q.No. 25 | நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் பொருளாதாரமே உயிர் நாடியாக உள்ளது என்பதைச் சங்க இலக்கியங்கள் வழி வெளிப்படுத்துக.<br>Express through evidences from Sangam literature that economy is the vital element of civilization and culture. |
| Q.No. 26 | சங்க காலத் தமிழர்களின் இசை மரபுகளைச் சங்க இலக்கியங்கள் வழி வெளிக்கொணர்க.<br>Bring out the musical traditions of the Sangam Era Tamils with suitable evidences from Sangam Literature. |